**24.06.2025**

**O.S.No.131/2015**

**வா.சா.2 : கலைமணி**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1)நான் ஏற்கனவே வாதி பெரியம்மாள் அழைத்தன் பேரில் தான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாதி வீட்டின் அருகில் பூர்வீகமாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து கணேசன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று தெரியும் என்றால் சரிதான். கணேசனுக்கு ஈஸ்வரி தான் முதல் மனைவி. அவர் தற்போது இறந்துவிட்டார்.

2) வழக்கில் 1,2 பிரதிவாதிகளை எனக்கு தெரியும். அவர்கள் கணேசனின் மூத்த மனைவியின் மகள்கள். வாதி பெரியம்மாள் கணேசனை முறைப்படி திருமணம் செய்துக்கொண்டதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கணேசன் பெற்றோர் பெயர் தெரியவில்லை. கணேசன் உடன் பிறந்தவர்கள் விவரம் பற்றி தெரியாது. தாவா சொத்து கணேசனுக்கு எவ்வாறு வந்தது என்றால் பாட்டன் பாட்டி சொத்து.

3) தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் போன்ற விவரம் எனக்கு தெரியாது. 1986ல் உண்ணாமலை, ஈஸ்வரி, பெரியம்மாள் பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது. பஞ்சாயத்து பேசியது தெரியும். நான் அப்போது அங்கு இருந்தேன். எனக்கு 65 வயது ஆகிறது. 1986 ல் என்னுடைய வயது என்வென்று கணக்கு பார்த்தால் தான் தெரியும். அப்போது எனக்கு 30-35 வயது இருக்கும் என்றும், எனக்கு பஞ்சாயத்து பேசியது தெரியாது என்றும், வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) அவ்வாறு பஞ்சாயத்து நடந்த போது நான் அங்க இருந்து இருத்தால் நான் முச்சலிக்காவில் கையெழுத்து போட்டு இருப்பேன் என்றும் அவ்வாறு பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்பதால் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. முச்சலிக்க பத்திரம் படி உண்ணாமலையும், ஈஸ்வரியும் தாவா சொத்தின் ஒரு பகுதியை 14.09.1988ல் வாதிக்கு கிரையம் செய்துவிட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) விவாகரத்து முச்சலிக்காவில் பூர்வீக சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லை என்று எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. எனக்கு தாவா சொத்து பற்றி எந்த விவரமும் தெரியாது என்றும், நான் 1ம் வாதியின் வீட்டிற்கு அருகில் வசிப்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.06.24 18:19:06 +0530

**Subordinate Judge, Attur.**